Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.184/2025 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW.5 |
| | | Defence |
| | | Court |
| Name | : மணிகண்டன் | |
| Father / Husband Name | : கந்தசாமி | |
| Village | : பார்த்திபனூர் | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : காவல் ஆய்வாளர் | |
| Religion | : | |
| Age | : 57 | |

( எதிரி ஆஜர் இல்லை. B.N.S.S. 355 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 06.07.2026

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் 25.02.2024 அன்று பரளச்சி காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் ஆய்வாளராக பணியாற்றி வந்தபோது, எனது பார்வைக்கு வைக்கப்பட்ட பரளச்சி காவல் நிலைய குற்ற எண்.09/2024 பிரிவு 328 இ.த.ச உ/இ 24(1) COTPA ACT வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் பாலமுருகன், அன்பு, பிரமோத், இராஜா ஆகியோர்களை விசாரணை செய்து வழக்கின் சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து 02.05.2024 அன்று எதிரி சேகர் மீது பிரிவு 328 இ.த.ச உ/இ 24(1) COTPA ACT படி குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

2. அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ள சாட்சிகளை 25.02.2024 அன்று நான் மறுவிசாரணை செய்தேன். நான் மறுவிசாரணை செய்ததில் சாட்சிகள் உதவி ஆய்வாளரிடம் கூறிய சங்கதிகளை திருப்பி கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதையும் பதிவு செய்யவில்லை. அ.சா.3 தன்னுடைய நீதிமன்ற சாட்சியத்தில் அவருக்கு புகையிலை பொருட்கள் பயன்படுத்தும் பழக்கம் கிடையாது என்று கூறியிருப்பதால் இந்த வழக்கு பொய் வழக்கு என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் தன்னுடைய நீதிமன்ற சாட்சியத்தில் 02.05.2024 அன்று தான் முதல் தகவல் அறிக்கையும் வழக்கு கோப்பையும் என்னிடம் ஒப்படைத்ததாக கூறியிருப்பதால் நான் சாட்சிகளை 25.02.2024 அன்று விசாரித்தேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த தவறான செயலில் ஈடுபடவில்லை என்றும் எதிரியின் கடையில் இருந்து எந்த வித வழக்கு சொத்துக்களையும்

கைப்பற்றபடவில்லை என்றும், முறையான விசாரணை இன்றி எதிரி மீது தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR
Digitally signed by M VASANTHA KUMAR

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.